1808

1808
2-55

REGISTERED No. M. 6165. அணா. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜுலை 1955.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| எங்கும் இஸ்லாமிய ஊழியர் தேவை! ... ... | 1 |
| புனித ஹஜ்ஜின் அற்புதக் காட்சி (டீ. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) ... | 7 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... | 13 |
| திரளாய் கூடுவீர்! (வேளாங்கண்ணி சாந்தி தாசன்) ... ... | 21 |
| ...ஆண்ட சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 23 |
| ...ன் சர்ச்சில்" (முஹம்மது தாவூது) | 27 |

... இஸ்லாம் ஆபீஸ்:
... ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

5L
Q7ண2M,M2gFI
M55
187044

# பத்ஹுல் இஸ்லாம்.


சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.



## இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா

இது ஷாம் தேசத்தி லிருந்த லாபி றென்னும் ஆலி முடைய மகள் இஸ்வத்து நாச்சியாரின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீ பென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹும், ஹபீ பென்பவர் வெளியூர் சென்றிருக்கும் போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சியாரைக் கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவ மேற்றுக் கொண்டு செய்த நற்செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும் மிகவும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப்பாகவும் படித்தறிய வேண்டியது அவசியம். இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

ஜுலை—1955.

## எங்கும் இஸ்லாமிய ஊழியர் தேவை!

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், உலகம் அந்தகாரத்தில் மூழ்கியிருந்த சமயத்தில், உலகை ஒளி மயமாக்கி உலக மக்களை உய்விப்பதற்காக, இறைவனின் திருச்சுடர் ஜோதியாய் அவதரித்தார்கள். அவர்களின் புனித ஜீவியம், லோகத்துக்கு எக்காலமும் தூண்டா மணிவிளக்காய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் பூத உடலம், இத்தாரணியை விட்டும் மறைந்து விட்டதெனினும், அவர்களின் சூக்ஷமதேக மென்னும் ஆத்ம ஞானச்சுடரானது எங்கணும் உலகமெல்லாம் பரவி வியாபித்து இலங்கிக் கொண்டிருக்கிறது.

இன்று உலகமெல்லாம் விஞ்ஞானம் பரவிப்போய், எங்கும் நாகரிகமும் உந்நத வாழ்வும் காணப்படுகின்றன. இந்த ஞானப் பிரகாசத்தை, இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன், எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், ஏற்றிவைத்தார்கள். அந்த மங்கா மணிவிளக்கு யாதெனில்: சர்வஞானமும் சகல தத்துவார்த்தமும் நிறைந்த பரிசுத்த குர்ஆன் ஷரீப் வேதமேயாகும்.

## குர்ஆன் திருச்சுடர் போதம்

திருக்குர்ஆன் போதனையி லிருந்து உலகம் முழுதும் மெஞ்ஞானம் பெறத்தொடங்கிய காலம், நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவித முடிவு காலமேயாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்களது மதீனா வாழ்வில்தான், குர்ஆனின் வஹீ வெளிப்பாடு பூர்த்தியடைந்தது. லோகமக்களின் சுபிக்ஷத்துக்காக இறைவன் என்னென்ன போதனைகளை யெல்லாம் புகட்ட வேண்டு மென்று நாடியிருந்தானோ, அவைகளை யெல்லாம் திருக்குர்ஆனின் 6000-க்கு மேற்பட்ட திருவாக்கியங்கள் மூலம் மிக துலக்கமாக போதித்து விட்டான்.

எனவே, "இன்று உங்களுக்கு உங்கள் (இஸ்லாம்) மார்க்கத்தைப் பரிபூரணமாக்கித் தந்துவிட்டேன். உங்களுக்கு என்னுடைய அருட் பாக்கியங்களை யெல்லாம் பரிபூரணமாக கொடுத்து விட்டேன்; மேலும் தீனுல் இஸ்லாமையே உங்கள் சார்பாக நான் விரும்பி ஏற்றுக்கொண்டுள்ளேன்" என்று எல்லாம் வல்ல இறைவன், திருக்குர்ஆனில் சுபச்செய்தி சொல்லி, நபிகட் பெருமானார் (ஸல்) அவர்களுடைய லோக சேவையை ஏற்றுக்கொண்டு நற்சாக்ஷியமும் அளித்துவிட்டான்.

இறைவன், தன் அருமை நபியின் சேவையைப் பாராட்டி நல்லுரை யளித்தது லோகத்தாருக்கே ஒரு நல்லருளாகும். அவ் வள்ளல் நபிக்கு ஆண்டவன் தந்த நற்சாக்ஷிப்பத்திரம் இன்று நம்முன் காட்சி யளித்து நமக்கெல்லாம் நல்வழி காட்டிக் கொண்டிருக்கிறது.

## தெய்வீக நற்சாக்ஷிப் பத்திர நமூனா

திருக்குர்ஆனே, இறைவனால் சர்வலோகத்துக்கும் ரஹ்மத்தாக அருளப்பட்ட இணையிலாததோர் நற்சாக்ஷிப் பத்திரமாகும். அந்நற்சாக்ஷிப் பத்திரத்தில், உலக வாழ்வுக்கு வேண்டிய எல்லா தத்துவார்த்தங்களும் உபமான உபமேயங்களுடன் போதிக்கப் பட்டிருக்கின்றன.

இறைவன், தன் கட்டளையையும் போதனைகளையும் லோகத்தாருக்கு, வஹீயின் மூலம் வெளிப்படுத்தி வைத்ததோடு மட்டும்

1894

இருந்துவிடவில்லை. தன் அருமை நபித்திருத்தூதர் மூலம், பாமர மக்களும் புரிந்தொழுகுமாறு அனுஷ்டித்துக் காட்டும்படியும் வழி செய்திருந்தான். எனவே அரபு நாட்டு அருந்தவப் பெரியாராகிய அஹ்மத் நபி (ஸல்) அவர்கள் உலகத்துக்கோர் வழிகாட்டியாக, அழகிய நமூனவாக, "உஸ்வயே ஹஸனு"வாக விளங்கி, தம் சொல் செயல் சுபாவம் மூலம் வழிகாட்டியாக விளங்கினர்கள்.

"சொல்வது யார்க்கும் எளிது; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற மூதுரைப் பிரகாரம், நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், திருக்குர்ஆன் உபதேசங்களை வாயினல் மொழிந்து மக்களுக்கு அறிவுச்சுடர் அளித்தாதரித்தது மட்டுமல்லாமல், அதன் படியே ஒவ்வோர் அம்சத்தையும் செயல் முறையில் அனுஷ்டித்து காட்டிப் போதித்தார்கள். ஆம், 'நீ அப்படிச்செய்; இப்படிச்செய்' என்று கட்டளை யிடுவது எளிது; ஆனல் அதன்படி செய்து காட்டு வது மிக அரிது. இந்த அரிய காரியத்தை எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் செய்து காட்டினர்கள்.

## அந்த தெய்வீக நமூனவின் பிரதிகள்

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், தெய்வீகத் திருக்கட்டளையாகிய குர்ஆனுக்கு பிரத்தியக்ஷமான செயல் நமூனவாக விளங்கி, லோக மக்கள் எங்ஙனம் நடந்தால் இகத்திலும் பரத்திலும், நன்மையும் விமோசனமும் பெற்றுய்யலாம் என்பதை, தம் அனுஷ்டானம் மூலம் நிரூபித்துக் காட்டினர்கள். ஆதலின் நபி அவர்களின் சொல் செயல்களை 'தெய்வீக வேத நமூன' என்று சொல்லுகிறேம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் மட்டும் செய்து காட்டி நல்வழி போதித்தது மட்டுமல்லாமல், தம்முடைய தோழர்களாகிய ஸஹாபாக்களுக்கு இதை போதித்தார்கள். அதாவது ஒவ்வொரு அறிஞரும் தாம் பாமரர்களுக்கு எதை உபதேசிக்கிறரோ அதன்படி அனுஷ்டித்தும் காட்டவேண்டு மென்று கட்டளை யிட்டார்கள்.

அங்ஙனம் தமக்குப் பின் பாமரமக்களுக்கு வழிகாட்டும் உத்த மர்களை உயர்வுபடுத்திக் கூறி யிருக்கிறர்கள். "உலமாவு உம்மதீ,

கல் அன்பியாயி பனீ இஸ்ராயீல்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இதன் பொருள் "என்னுடைய சமூகத்தில் தோன்றும் ஆலிம்கள், இஸ்ரவேல் சமூகத்தில் தோன்றிய நபிமார்களுக்கு ஒப்பானவர்கள்" என்பதாகும்.

## நபிகள் போன்றவர் ஆலிம்கள்

ஆம். பல்லாண்டு சிரமப்பட்டு ஓதி உணர்ந்து அறிஞர்களாகவும் போதகர்களாகவும் நீதிவான்களாகவும் விளங்கும் ஆலிம் உலமா மௌலவி ஹஜ்ரத்துமார்களை, முஸ்லிம் பாமர மக்கட் சமுதாயம், அன்று தொடுத்து இன்றுவரை, பாராட்டியும் ஆதரித்தும் கண்ணியப்படுத்தியும் வந்திருக்கிறது. உண்மையில் ஆலிம் உலமாக்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே யாவர். ஏனெனின் சமூகத்தை ஆக்கவும், சீர்திருத்தவும், பாதுகாக்கவும் அவர்களால் முடியும்; அவர்களின் வாக்கிலே ஓர் அரிய சக்தியுண்டு. அல்லாஹ் ரஸூலின் கட்டளைகளை இங்கிதமான முறையில் எடுத்தோதி வஅழு, உபதேசம், நஸீஹத்து புரியும்போது ஆலிம் உலமாக்களை பாமர மக்கள் தங்கள் சென்னி மிசை மீது தூக்கிவைத்துக் கொள்ள தயாராய் விடுகிறார்கள்.

அப்படிப்பட்ட உண்மை உலமாக்களை உயர்வுபடுத்தியே தான், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களும் தம் திருவாய் மொழியால், "என்னுடைய சமூகத்து ஆலிம்கள் இஸ்ராயீல் கூட்டத்து நபிமார்களுக்கு ஒப்பாவர்" என்று நற்சாக்ஷியம் பகர்ந்திருக்கிறார்கள்.

## ஆலிம்களின் சேவை வேண்டும்

ஓதிய வண்ணம் அமல் செய்யும் அறிஞரே ஆலிமாவர்; ஓதிப்படித்துவிட்டு அதன்படி நல்அமல் செய்யாதவர், பெயருக்கு அறிஞர் என புகழப்பட்ட போதிலும் உண்மையில் அவர் ஆலிமாக மாட்டார். ஏனெனின் இக்காலே, சொல்வது யாருக்கும் எளிதாய் இருக்கிறது; ஆனால் அனுஷ்டான முறையில் பார்க்கப்போனால் தான் அவர்களின் ஆலிம் தன ஊழல் வெளிப்படுகிறது.

கிராம்போன் பிளேட்டில் எத்தனையோ நல்ல விஷயங்களை கேட்கின்றோம்; ரேடியோ பெட்டியில் எத்தனையோ நற்போதனை

களை செவியாரக் கேட்கின்றோம். ஆனால் அந்த கிராமபோனையும் ரேடியோவையும் நாம் 'அறிஞர்' என்றும், 'ஆலிம்' என்றும் சொல்லி விடமுடியுமா? அவைகட்கு பகுத்தறிவு உண்டா? சொல்லிய வண்ணம் செய்து காட்டுவதற்கு யோக்யதாம்சம் உண்டா?

இங்ஙனமிருக்க, ஓர் ஆலிம் மஸ்ஜித் மிம்பர் மீது ஏறி குத்பா ஓதி பல உபதேசங்களை புரிந்தபோதிலும், வஅலு மஜ்லிஸ் மேடைகளில் இருந்து ஹதீது தலீல்களை எடுத்தோதிய போதிலும், நேரில் அமர்ந்து அத்தாக்ஷிகளோடு ஆயத்துகளை ஓதி வியாக்யானங்கள் செய்த போதிலும்-அவர் உண்மையான ஆலிமாய்விட முடியுமா? எதுகாறும் அவர் தான் சொன்னவண்ணம் அனுஷ்டானம் புரிய வில்லையாயின், அதுவரை உண்மை ஆலிம், உத்தம மௌலவி, நல்ல ஹஜ்ரத் என்று சொல்லிவிட முடியாது.

## கற்றோர்க்கு எங்கும் சிறப்பு

சொல்லிய வண்ணம் செய்து காட்டும் ஆலிம்களை, சென்னிமீது தூக்கிவைத்துக் கொண்டாடுவோம். அவர்களை நாம், "ஆலிமுன், பில் அமல்" என்று பாராட்டுவோம். அவர்களிடம் நமது மரியாதை யெல்லாம் உறைந்து கிடக்கட்டும்.

"இன்னமா யக்ஷல்லாஹ மின் இபாதிஹில் உலமாவு" இது குர்ஆன் வாக்கியம். அல்லாஹு த ஆலா அளிக்கும் நன்மொழிச் சான்று! "அடியார்களில், அல்லாஹ்வுக்கு அதிகம் பயந்து ஒழுகுபவர் ஆலிம்களே" என்பது இவ்வாக்கியக் கருத்து. 'ஆஹா! இப்படிப் பட்ட பக்தசிகாமணிகளா ஆலிம்கள்! என்று வியப்படைகிறோம். ஆம்! யார்' ஆண்டவனுக்கு அதிகம் பயந்து, தீனுல் இஸ்லாத்தின் நற்போதனை பிரகாரம் நடந்து நல்வழிபடுகிறாரோ பயப்படுகிறாரோ அவரே அறிஞர்; அவரே ஆலிம்; அவரே அல்லாமா; அவரே மௌலவி; அவரே நல்ல முல்லாஜீ.

# கஸஸுல் அன்பியா

## இதில் நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாரூத் மாரூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம், 10.வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யாகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸ்உ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுசு அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கியிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம்.

கலிகோ பைண்டு விலை. 9—8—0

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதற் பாகம் றப்பு கலிகோ பைண்டு விலை. 6

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# புனித ஹஜ்ஜின் அற்புதக் காட்சி.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

புனித ஹஜ்ஜு காலம் ஆரம்பமாய் விட்டது. அல்லாஹ் வுடைய நல்லடியார்களில் சகல வசதிகளும் உடையவர்கள், இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகிய 'ஹஜ்ஜு பைத்துல்லாஹ்' வை நிறைவேற்றுவதற்காக, சர்வ ஆயத்தங்களுடன் யாத்திரை புறப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பம்பாய் நகரம் போய், அங்கு தேக வைத்திய ஆரோக்கிய அத்தாக்ஷிகள் பெற்றுக்கொண்டு திருமக்காவுக்குப் போய்வர கப்பல் டிக்கட் பெற்று இடவசதி ஏற்படுத்திக் கொள்ள சிலநாள் பம்பாயில் தங்குவார்கள்.

## கப்பல் யாத்திரை.

எல்லா முன் ஏற்பாடுகளையும் செய்து கொண்டு, ஆயிரக் கணக்கான முஸ்லிம் பக்தர்கள், ஒருமிக்க கப்பலில் மக்காவை நோக்கிப் புறப்படுவார்கள். கப்பல் மெதுவாகவே சமுத்திர ஜலத்தின் மீது மிதந்து ஊர்ந்து இரவும் பகலும் சென்று கொண்டிருக்கும்.

சமுத்திர யாத்திரை மகா விசித்திரமானதாகும். துறை முகத்தை விட்டு லங்கர் எடுத்து கப்பல் புறப்பட்டு விட்டதும், சிறிது நேரத்தில் நாம் புறப்பட்ட கரை மறைந்துப் போய் விடும்; பிறகு கட்டிடங்களும், மாளிகைகளும், லைட் ஹவுஸ் என்னும் கலங்கரை விளக்கும் மறைந்துப் போய் விடும். அப்போது நாலா புறத்திலும் எங்கு நோக்கினும் சமுத்திர தண்ணீர் மயமாகவே இருக்கும். கரையோரம் துள்ளிப்பாய்வது போல் பெரிய அலைகள் இராது. மெல்ல மெல்ல மோதும் அலைகளை பீறிக் கிழித்துக் கொண்டு கப்பல் போய் கொண்டே இருக்கும்.

ஹஜ்ஜுக்குப் புறப்படும்போதே ஹாஜிகள், இந்தியாவிலிருந்தே 'கபன்' துணியும் கொண்டு போகிறார்கள். ஆம்! இஹ்ராம் கட்டிக் கொள்ளும் போது உடுத்திக் கொள்வதற்கும், மரணம் ஏற்பட்டால் உபயோகமாவதற்கும் சுமார் நாற்பது கஜம் வெள்ளைத்துணி (மல்பீஸ்) வாங்கிக் கொண்டு போவார்கள்.

## ஹாஜிகளின் தண்ணீர் 'கப்ரு'

மரணம் எங்கு நேரிடும் என்பது யாருக்கென்ன நிச்சயம்! கப்பல் நடு சமுத்திரத்தில் போய்க் கொண்டிருக்கும் போது, துரதிருஷ்ட வசமாய் யாரேனும் இறந்து விட்டால், மையித்தை

கழுவி குளிப்பாட்டி, இஹ்ராமுக்குரிய வெள்ளைத் துணியை கபன் துணியாக்கி, மையித்தை போர்த்தி, ஜனஸாத் தொழுகையும் நிறை வேற்றி, ஒரு கருப்பு பலகைப் பெட்டியில் மையித்தை வைத்து, அதற்குள் கனத்துக்காக இரும்புத் துண்டையும் வைத்து மரியாதை யோடு, மாலுமிகள் அதை சமுத்திரத்துள் நழுவ விட்டு விடுவார்கள். இதுதான் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டு கப்பல் யாத்திரையில் மவுத்தாய் விடும் ஹாஜிகட்கு 'கப்ரு' ஆகும்.

## ஜித்தாத் துறைமுகம்.

பம்பாய் துறைமுகத்தி லிருந்து 'ஜித்தா' துறைமுகத்துக்கு, கப்பலானது சுமார் பன்னிரண்டு நாட்களில் போய்ச் சேர்ந்துவிடும். சமுத்திரத்தில் புயலோ கொந்தளிப்போ இருந்தால், அல்லது கப்பலுடைய போக்குக்கு ஏதேனும் தடங்கல் ஏற்பட்டால், இன் னும் சிலநாள் தாமதம் ஏற்படலாம்.

ஜித்தா துறைமுகத்துக்கு ஹாஜிகள் கொண்டுபோய் சேர்க்கப் பட்டு இறக்கப்படுவார்கள். 'ஜித்தா' என்பது அரபுதேச ஆரம்பத் துறைமுகத்துக்கும் அதையடுத்த ஓர் சிறு பட்டணத்துக்கும் பெயர். திருமக்காவுக்கு ஆண்டுதோறும் இலக்ஷக் கணக்காக ஹாஜி யாத்திரிகர்கள் போய் வருவதனாலேயே ஜித்தாவுக்கு மகிமையும் வருமானமும் உண்டாயிருக்கின்றன.

'ஜித்தா' என்பது தவறான உச்சரிப்பு. 'ஜத்தா' என்றிருக்க வேண்டும். 'ஜத்தா' என்றால் 'அன்னை-தாய்' என்று அர்த்தம். நமது ஆதித்தாய் ஹஜ்ரத் பீபி ஹவ்வா அலைஹிஸ்ஸலாமுடைய கப்ரு என்னும் மஜார் அங்குதான் இருக்கிறது. ஹஜ்ஜுக்குச் செல்வோர் சிலர், இந்த கப்ரைப் போய் ஸியாரத்து செய்வதுண்டு.

## இஹ்ராம் கட்டிக் கொள்ளல்.

ஹாஜிப் பிரயாணிகள், மக்காவின் எல்லைக்குட் போகும் முன்பே இஹ்ராம் கட்டிக் கொள்வார்கள். சிலர் 'யலம்லம்' என்ற ஸ்தலத்தில் ஸ்நானம் செய்து சுத்தமாகி, ஹஜ்ஜுக்காகவும் உம்ருவுக்காகவு மென்று நிய்யத்து வைத்து இஹ்ராம் கட்டிக் கொள்வார்கள்.

இஹ்ராம் கட்டிக் கொள்வது என்னவென்றால், ஊரிலும் வீட்டிலும் நாம் வழக்கமாக உடுத்துக் கொள்ளும் ஆடை அலங் காரங்களை விடுத்து, அல்லாஹ்வுக்காக நம்மை நாம் அர்ப்பணித்து விட்டோம் என்பதை அறிவிக்கும் முறையில், எல்லா ஹாஜிகளும் அவர் எந்த தேசத்தைச் சேர்ந்தவராயினும், எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவராயினும், எந்த பாஷையை பேசுபவராக யிருந்தாலும், எந்த நிறத்தை-கோலத்தை-தோற்றத்தை யுடையவராக இருந்தாலும்

'அல்லாஹ்வின் முன் எல்லோரும் சமம்' என்பதை பிரத்தியக்ஷமாய் எடுத்துக் காட்டும் முறையில், எல்லோரும் ஒரே விதமாக கீழுக்கு ஒரு வெள்ளை வேஷ்டியும், மேலுக்கு ஒரு வெள்ளைப் போர்வையும் போட்டுக் கொண்டு, திறந்த தலையுடன் தாழ்மையை தெரிவித்துக் கொண்டு, "லப்பைக்க லப்பைக்க," (இறைவனே, நான் உன் திருச்சமுகத்தில் பணிய வந்திருக்கிறேன்) என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதாகும்.

இஹ்ராம் கட்டிக் கொண்டபின், யாருடனும் சண்டை சச்சரவு புரியக் கூடாது; எந்த ஜீவனுக்கும் தொந்தரவு கொடுக்கக் கூடாது; வாசனை திரவியம் பூசிக்கொள்ளலாகாது; ஆடம்பரம், சிங்காரம் ஏதும் கூடாது; க்ஷவரம் செய்து கொள்ளலாகாது; தலைப் பேனையும் கொல்லக் கூடாது; வேட்டையாடலாகாது; பெண்ணிச்சை கொள்ளக் கூடாது; ஆண் பெண் முத்தமிடல்-சரசம் முதலியனவும் கூடாது.

இஹ்ராம் கட்டியவர் எல்லோரும் தலை சிறந்த வண்ணம் ஆடம்பரமின்றி, அல்லாஹ்வுடைய தர்பாராகிய கஃபத்துல்லாஹ் வுடைய எல்லையில் பிரவேசித்து, முதலில் நபில் தொழுதுக் கொள்ள வேண்டும்; தக்பீர்-தஹ்லீல்-லப்பைக்க முதலியன ஓதிக் கொண் டிருக்க வேண்டும். ஆண்டவனை அதிகம் தியானிக்க வேண்டும்.

## கஃபத்துல்லாஹ்வின் சிறப்பு

கஃபத்துல்லாஹ் என்றால் இறைவனின் புனித வீடு என்று அர்த்தம். 'பைத்துல்லாஹ்' என்றும் சொல்லலாம். பொதுவாக 'மஸ்ஜிதுல்ஹராம்' என்றும் மற்றொரு பெயர் சொல்லப்படும்.

திரு மக்காவின் மகாப் பள்ளிவாசலின் பரந்த பிராகாரத்தை 'ஹரம் ஷரீப்' என்று சொல்லுவார்கள். ஹரம் எல்லைக்குள் முஸ்லிம்கள் மகா பயபக்தியோடு இருப்பார்கள். எவ்விதமான அடாத காரியமோ, பாபக்கிருத்தியமோ யாரும் புரிய மாட்டார்கள். அங்கு அல்லாஹ்வுடைய பயமும் பக்தி விசுவாசமும் தான் மனதில் குடிகொண்டிருக்கும்.

ஏக நாயனாகிய அல்லாஹ்வை வணங்குவதற்காக, உலகில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிவாசல் மஸ்ஜிதுல் ஹராம் எனும் இந்த கஃபாவேயாகும். இது மிகப்பெரும் விசாலமான பள்ளிவாசல். புனித பிராகார ஹரம் ஷரீபை சூழ்ந்து 43-வாசல்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்பது மிகப் பெரியவையாகும் அதிலும் மூன்று மிகவும் குறிப்பிடத் தக்கவை யாகும்.

இந்த எல்லா வாசல்கள் வழியாகவும், மக்கமா நகர் வாசிகளும் ஹாஜிகளும், இலக்ஷக் கணக்காக தினந்தோறும் ஒவ்வொரு

தொழுகை நேரத்திலும் வந்து கொண்டும், போய்க் கொண்டு மிருப்பார்கள். ஒவ்வொரு வாயலுக்கும் (1) பாபுஸ் ஸலாம் (2) பாபே இப்ராஹீம் (3) பாபுஸ் ஸியாத்—என்று பெயர்கள் உண்டு.

பெரிய-விசாலஹரம் ஷரீபின் சுவருக்கு உள்பக்கம் தாழ்வாரக் கட்டிடம் இருக்கும். வரிசையாக கம்பீரமான தூண்கள் நிறுத்தப் பட்டு கட்டிடம் கட்டப்பட்டிருப்பது கண் கொள்ளா காட்சியாகும்.

ஹரம் ஷரீபு ஸஹன் (முற்றத்துக்கு) மத்தியில் சிகப்புக்கல் தளவரிசையுள்ள மத்தியப் பாங்கில், நான்கு மூலை சதுரமான நாற்புறச் சுவருடைய ஓர் அற்புதக் கட்டிடம் காணப்படும். அது தான் கஃபாவாகும். கஃபாவானது கருப்புக் கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. அகலம் ஒவ்வொரு பக்கமும் 9-கஜம் உடையதாகவும், நீளம் 12 கஜம் உடையதாகவும் இருக்கிறது. சுவரின் உயரம் சுமார் 100 கஜம் உடைய கம்பீரமான தோற்ற முடையதாகும்.

## ஹஜ்ருல் அஸ்வத்

நாற்புற கஃபாத் திருச் சுவரின் நான்கு மூலைகளும் குறிப்பிடத் தக்க விசேஷமுடையதாகும். (1) ஹஜ்ருல் அஸ்வத் என்ற கருப்புப் புனிதக் கல் ஒரு மூலையில்-ஓரத்தில் ஆள் உயரத்தில் அபூர்வமாய் பதிக்கப்பட்டிருக்கிறது. (2) ருக்னேயமானி, (3) ருக்னே இராகி (4) ருக்னே ஷாமி என்ற மற்ற மூன்று மூலைச் சுவர்களும் விசேஷமானதேயாம்.

ஹஜ்ருல் அஸ்வத் கல்லை நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மிகவும் புனிதமாய் கருதி, முத்தமிட்டுள்ளார்கள். பிறகு ஸஹாபாக்களும் அதை முத்தமிட்டு புனிதப் படுத்தினார்கள். ஆதலின் உலக முஸ்லிம்கள் அதை கௌரவிப்பதில் வியப்பொன்று மில்லை.

## ‘தவ்வாப்’

கஃபத்துல்லாஹ்வை, அல்லாஹ்வுக்காக வென்று வலம் சுற்றி ‘தவ்வாப்’ செய்ய வேண்டும். இது ஹஜ்ஜுக் கடமைகளில் ஒன்றாகும். இங்ஙனம் ஏழுமுறை வலம் வந்து தவ்வாப் செய்ய வேண்டும். ஆண் பாலர்கள், துள்ளிக்குதித்து ஓடும் பாவனையில் தவ்வாப் செய்ய வேண்டும். இதை ‘ரமல்’ என்று சொல்வார்கள். பெண்பிள்ளைகள், ஓடிக் குதிக்காமல் சாவதானமாய் தவ்வாப் செய்ய வேண்டும்.

இங்ஙனம் ஹஜ்ஜு காலத்தில் கஃபத்துல்லாவைக் கண்ணால் முதலில் தரிசிக்கும் போதும், அங்கு காலடி வைத்துப் பிரவேசிக்கும் போதும், தவ்வாப் சுற்றும் போதும், ஹஜ்ருல் அஸ்வதை முத்தமிடும் போதும், மற்ற நேரங்களிலும் ஓத வேண்டிய துஆக்கள்

அநேக மிருக்கின்றன. அவற்றை கிதாபுகளி லிருந்து படித்தறியலாம்; அல்லது அனுபவமுள்ள பழைய ஹாஜிகளிடம், அல்லது மு அல்லிம் களிடம் கேட்டுப் படித்துக் கொள்ளலாம். நபில் தொழுகைகளும் துஆக்களும் ஹஜ்ஜில் முக்கியமானவையாம்.

ஹஜ்ருல் அஸ்வத் கல்லை கையினால் தான் தொட்டு முத்தமிட வேண்டு மென்ற கட்டாயமில்லை. அப்படி சந்தர்ப்பம் கிடைப்பவர்கள் பாக்கியசாலிகளே; அங்ஙனமின்றேல், ஜனக்கூட்டத்தை தள்ளி நெருக்காமல் தூரமிருந்தே, கையையோ கழியையோ அதன் பக்கம் நீட்டி தொடுவதாக சமிக்ஞை செய்து, அதை முத்தமிடுவது போதுமாகும்: நன்மை கிடைத்து விடும்.

## ஸபா-மர்வா

"ஸபாவும் மர்வாவும் இறைவனுடைய அடையாளங்களின்று முள்ளனவாகும்" என்பது குர்ஆன் ஆயத்தின் கருத்து.

ஸபா என்பதும், மர்வா என்பதும், மக்காவுக்கு சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள இரண்டு குன்றுகளுடைய பெயர்களாகும். இந்த இடத்தில் ஹாஜிகள் கூடி "ஸயிய்" செய்வார்கள். அதாவது ஸபாவுக்கும் மர்வாவுக்கு மிடையிலுள்ள சுமார் இரண்டு மைல் தூரத்தில் ஓடும் பாவனையில் விரைந்து நடப்பார்கள். இதுவும் ஹஜ்ஜுடைய கடமைகளில் (வாஜிபான) ஒன்றாகும். இங்கும் பெண்கள் மெதுவாகவே செல்லலாம்.

## குர்பானி

பிறகு கஃபத்துல்லாவுக்கு வந்து நபில் தொழுதுக் கொள்ள வேண்டும். இனி ஹாஜிகள் செய்ய வேண்டிய கடமைகளில் பாக்கி யானதொன்று 'குர்பானி'யாகும். தம் சக்தியானுசாரம் ஒவ்வொரு ஹாஜியும் ஆடோ, மாடோ, ஒட்டகமோ அறுத்து குர்பானி கொடுத்து மாமிசத்தில் பெரும் பகுதியை எளியோர்களுக்கு தானம் செய்ய வேண்டும். ஒரு பகுதியை தாமும் சமைத்து சாப்பிடலாம். குர்பானி (பலி) கொடுக்க சக்தியில்லாதவர் 10-நோன்புகள் நோர்க்க வேண்டும்.

ஹஜ்ஜுடைய கடமைகளில் மினாவில் (மைதானில்) ஓர் இரவு பகல் தங்கி யிருப்பதும், தொழுகை வணக்கம் புரிவதும் முக்கிய மானவையாகும். அதாவது குர்பானி செய்வதற்கு முன்னாள், மினா மைதானத்தில் எல்லா ஹாஜிகளும் வந்து தங்குவார்கள்.

மினா மைதானத்தில் ளுஹர் (பகல்) தொழுகையை நிறைவேற்ற வேண்டும். மினாவில், மூன்று நாள் மூன்று மூன்று பகல் தங்கி யிருப்பது மிகமிகப் புண்யமான காரியமாகும். அங்கு தொழுதுக்

கொள்வதோடு, இதர சில சடங்குகளும் புரிதல் வேண்டும். அதாவது ஏழு பொடிக் கற்களை, அங்குள்ள மினரா (ஸ்தூபி) நோக்கி எறிய வேண்டும். கல் எறியும் போது 'தக்பீர்' ஓத வேண்டும். மூன்று நாள் தங்கி யிருந்தால் மூன்று நாளும் இங்ஙனம் கற்கள் எறிய வேண்டும்.

## ஹஜ்ஜு சம்பூர்ணம்

மினவில் கல் எறிந்த பின்னர், அங்கு தங்கி தொழுகை வணக்கம் புரிந்த பின், ஹாஜிகள் துல்ஹஜ் 10-வது நாள் மக்காவுக்கு வந்து விடுவார்கள். ஈதுல் அல்ஹா தொழுகையில் கலந்து கொள்வார்கள்; குத்பா கேட்பார்கள்.

இவ்வாறு ஹாஜிகளுடைய ஹஜ்ஜு, உம்ரா வணக்க ஒழுக்கங்கள் சம்பூர்ண மடைகின்றன. (ஹஜ்ஜு வணக்க முறைகள் இங்கு சுருக்கமாகவே கூறப்பட்டிருக்கின்றன; விபரமும் விளக்கமும் தெரிந்தவர்களிடம் நேரில் கேட்டுக் கொள்வது நலம்.)

ஹஜ்ஜுடைய சடங்குகளில், தத்துவங்கள் அடங்கி யிருக்கின்றன. வெளிப்படைக்கு அவை சாதாரண செயல்கள் போலிருப்பினும், ஆத்மார்த்தப் பொருளும், தியாகப் பான்மையும், சகிப்புத் தன்மையும், எதையும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணிக்கும் அரிய பண்பாடும் அமைந்திருக்கின்றன. ஆதலின், ஹஜ்ஜுடைய சடங்குகளில், சந்தேகமோ தவறுன நம்பிக்கையோ கொள்ளாமல், பயபக்தியுடனும் நம்பிக்கையுடனும் அனுஷ்டித்தாலே, ஹஜ்ஜுடைய உண்மைப் பயனை ஹாஜிகள் அனுபவிக்க முடியும். இன்றேல் வெறும் யாத்திரானுபவமும் சிரமங்களும் பண விரயமும் தான் கண்ட பலன்.

## மதீனு ஜியாரத்து

திருமக்காவில் ஹஜ்ஜுக் கடமையை முடித்துக் கொண்டு ஹாஜிகள், திரு மதீனு நகருக்குப் போய், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புனித மஜாரை தரிசித்து துஆ வேண்டிக் கொள்வர். மஸ்ஜிதே நபவீ என்னும் திரு நபிப்பள்ளியில் தொழுதுக் கொள்வர்.

ஹாஜிகள் மக்கா, மதீனு யாத்திரையில் அநேக அற்புதங்களைக் காணுவர். ஆத்மார்த்த இன்பம் அனுபவிப்பர். எல்லாம் வல்ல இறைவன், எல்லா முஸ்லிம் கட்கும் இவ்வானந்த பாக்யத்தை அளித்தருள் புரிவானுக. ஆமீன்!

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 15—வது பகுதி)

### 30—வது அத்தியாயம்.

கிரீன் பிரான்ஸுக்கு போனது யாருக்கும் தெரியாத இரகசிய மல்ல. ஸிம்ஸனுக்கும் இன்ஸ்பெக்டர் பென்டனுக்கும் கிரீன் சென்றது தெரியும். குலோரியா அனுப்பிய தந்தி இரத்தச் சின்ன சங்கத்தின் கையில் கிடைத்திருந்தால், அந்த சங்க தலைவனுக்கும் தெரிந்திருக்கும்.

கிரீன் பிரான்ஸிலிருந்து வெற்றியுடன் திரும்பி வரும் அன்று, இன்ஸ்பெக்டர் பென்டனை பார்க்க ஸிம்ஸன் போலிஸ் ஸ்டேஷனுக்கு போயிருந்தார். இன்ஸ்பெக்டர் பென்டன் ஸிம் ஸனைப் பார்த்ததும், அவர் வசம் ஒரு ஸீல்போட்ட கவரைக் கொடுத் தார். அதை ஸிம்ஸன் வாங்கி கையில் வைத்து அதன் எடை எவ்வளவு என்று பார்ப்பது போல் கையை ஆட்டி, ஆட்டி, அந்த கவரை உற்று கவனித்தார்.

"இந்த கவர் யார் அனுப்பியது, சொல்ல முடியுமா?" என்று பென்டன் கேட்டார்.

ஸிம்ஸன் சிறித்துக் கொண்டே "ஒரு குள்ளமான மனிதன்; தாடி வைத்திருப்பவன்; மூக்கால் பேசுபவன்; ஒரு சிறிய கடையின் சொந்தக்காரன்" என்று சொன்னர். இதைக்கேட்ட பென்டனும் சிறிது சிறித்தார்.

"நான் மந்திரத்தால் ஒன்றும் கண்டுபிடித்து சொல்லவில்லை. ஏனெனில், இது பேக்கர் தெருவு பிரவ்னிட மிருந்து வந்ததென்று எனக்கு முன்பே தெரியும்" என்று ஸிம்ஸன் சொல்லியதுடன் "நீங்கள் இரத்தச் சின்ன சங்கத்துக்கு கடித போக்கு வரத்து எந்த விலாஸத்திற்கு போகிற தென்று கண்டு பிடித்தது எனக்குத் தெரியும். உங்களுக்கு முன்பே, நான் அந்த விலாசத்தைக் கண்டு பிடித்ததுடன், இரத்தச் சின்ன சங்கத்துக்கு வரும் எல்லா கடிதங்களையும் நான் படித்து பார்த்து வந்தேன். பிறகு நீங்கள் அங்கு வந்து விசாரித்ததாக பிரவ்ன் என்னிடம் சொன்னர். அதன்பேரில், தனக்கு இரத்தச் சின்ன சங்கத்தைப்பற்றி

தெரிந்த வரையில் விபரமாக எழுதி உங்களுக்கு அனுப்புமாறு பிரவ்னிடம் நான் தான் சொன்னேன்'' என்றும் சொன்னர்.

“ஓஹோ! முன்பே தெரியுமா?'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

“ஆம். இரத்தச் சின்ன சங்கத்துக்கு வரும் கடிதங்கள் அந்த விலாசத்திற்கு வருகின்றன. தினசரி மாலையில் ஒரு சிறு பையன் அங்கு வந்து எல்லா கடிதங்களையும் வாங்கி தனது ஜேபியில் வைத்துக் கொண்டு செல்லுவது வழமை. அவன் ஜேபியிலிருந்து திருடுபவனை கண்டுபிடிக்க முடியவில்லை''

“திருடுகிறார்களா?'' என்று ஆச்சரியத்துடன் பென்டன் கேட்டார்.

“ஆம், அந்த பையனுக்குத் தெரிந்ததெல்லாம், அந்த கடிதங்களை ஜேபியில் வைத்துக் கொண்டு ஜனகடமாட்டம் அதிகமுள்ள தெருவில் நடந்து செல்லவேண்டும். அவ்வாறு அவன் செல்லும் போது, அவனையு மறியாமல் ஜேபியிலுள்ளது திருடுபோய் விடுகிறது''

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் இன்னும் ஆச்சரியமாகி “நீங்களும் அதிசயமான பேர்வழிதான். இன்னும் என்ன என்ன கண்டுபிடித்தீர்கள்'' என்று கேட்டார்.

“நான் முன்பே நினைத்தபடி, குலோரியா அந்த சங்கத்தைச் சேர்ந்தவளே. அவள் தனக்கு அன்ருடும் தெரியும் விஷயத்தை அவ்வப்போது எழுதி சங்கத்திற்கு அனுப்பி விடுகிருள்'' என்று ஸிம்ஸன் சொன்னர்.

“இது தெரிந்த பின் இவ்விஷயமாக என்ன செய்தீர்கள்? என்ன செய்யப் போகிறீர்கள்?''

“அவளைக் கொண்டு தான் நம்மால் இந்த இரத்தச் சின்ன சங்கத்தை பிடிக்க முடியுமென்று நான் அடிக்கடி சொன்னேனல்லவா? நான் சொன்னபடியே நடக்கப் போகிறது பாருங்கள். எனக்கு பிரவ்ன் விஷயம் தெரிந்து சுமார் 2 மாதமாகிறது. முதல் அவர் இரத்தச் சின்ன சங்க கடிதங்களை காட்ட தயங்கினர். பிற்பாடு நான் போலீஸைச் சேர்ந்தவனென்று சொன்னதின் பேரில் தான், ஷெ கடிதங்களைப் பார்க்க முடிந்தது. நான் போலீஸைச் சார்ந்தவனுயில்லாதிருந்தும் இவ்வாறு பிரவ்னிடம் சொல்லியது தவறல்லவா?'' என்று ஸிம்ஸன் கேட்டார்.

“அநேக சமயங்களில் நீங்களும் போலீஸில் சேர்ந்திருந்தால் எவ்வளவு நலமென்று நான் அடிக்கடி நினைத்திருக்கிறேன். சரி-

தற்போது குளோரியாவும் இரத்தச் சின்ன சங்கத்தில் சேர்ந்து விட்டாள்!"

"இருந்த போதிலும் இன்னும் நான் அவளை எனது வேலையிலேயே வைத்திருக்கப்போகிறேன். அவளிடம் நெருங்கி யிருப்பது நல்லதென்றே நினைக்கிறேன்" என்று ஸிம்ஸன் சொன்னார்.

"கிரீன் தற்போது வெளி ஊருக்கு என் போயிருக்கிறார்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"தனது வியாபார விஷயமாக போயிருக்கலாம். ஏதும் புதிய எஸ்டேட் வாங்க போயிருக்கலாம். வெளியில் திராக்ஷை தோட்டங்களில் சுமார் மூன்றிலொருபாகம் அவரைச் சேர்ந்ததாயிற்றே. உங்களுக்குத் தெரியாதா?" என்று ஸிம்ஸன் சொன்னார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் பதில் சொல்லாமல் தனக்குள்ளேயே, கிரீன் எதற்காக சாண்டி நகரம் போயிருக்கக் கூடுமென்று நினைத்துக் கொண்டிருந்தார்.

"கிரீன் சாண்டி நகரம் போனது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ஸிம்ஸன் கேட்டார். எதிர்பாராத சமயத்தில் தான் நினைத்துக் கொண்டிருக்கும் விஷயத்தையே ஸிம்ஸன் கேட்டதும், இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார். "எப்படி நான் நினைத்துக் கொண்டிருப்பதை சொல்லி விட்டீர்கள்? ஒருவன் மனதிலுள்ளதையும் நீங்கள் அறிய முடியுமோ?" என்று இன்ஸ்பெக்டர் கேட்க, "சில சமயத்தில் அதுவும் முடியும். நான் முதலில் கிரீன் பாரீஸ் போயிருப்பாரென்று நினைத்தேன்" என்று ஸிம்ஸன் பதில் சொன்னார்.

"அவர் சாண்டி நகரம்தான் போயிருக்கிறார்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னாரேயன்றி, தனக்கு எவ்வாறு அவ்விஷயம் தெரிந்ததென்று விளக்கவில்லை. அதுவுமல்லாமல் தனது மனதிலுள்ளதை உடனே தெரியப்படுத்திய எதிரே உட்கார்ந்துள்ள ஸிம்ஸனை பற்றி நினைத்து நினைத்து ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் டெலிபோன் மணி அடிக்கவே, அதையெடுத்துக் கேட்டார். கிரீன் பேசினார். "இன்ஸ்பெக்டரா? நீங்கள் உடனே எனது வீட்டுக்கு வாருங்கள். ஸிம்ஸனையும் கூப்பிட்டு வாருங்கள். ஒரு முக்கியமான சமாச்சாரம் சொல்ல வேண்டும்" இதைக்கேட்டதும் டெலிபோனை வைத்து விட்டு, "அவருக்கு என்ன விஷயம் முக்கியமானது தெரியும்?" என்று தனக்குள்ளேயே சிந்தித்தார். இன்ஸ்பெக்டர் டெலிபோனை கையில் எடுத்ததிலிருந்து ஸிம்ஸன் இன்ஸ்பெக்டர் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

குலோரியா தனது சாப்பாட்டு வேலையை முடித்துக் கொண்டு தனது வீட்டு வேலையை கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் எப்பொழுது தனியாக யிருந்தாலும் அவளின் மனதில் டாமைப் பற்றியே எண்ணம் வந்து கொண்டிருந்தது. அவ்வெண்ணம் தன் மனதில் வராவண்ணம், தனது மனதை ஏதேதோ வேலையில் செலுத்திக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில் வாயற்கதவு மணி அடித்தது. திறந்து பார்க்க, ஒரு பார்சல்காரன் ஒரு சதுரமான பார்சலை கொடுத்து விட்டுச் சென்றான். அதன் மேல் இவள் விலாசம் தனித்தனி கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. அதை வீட்டினுள் எடுத்துச் சென்று மேலே கட்டியுள்ள நூலை அறுத்துப் பிரித்தாள். உள்ளே, மேல் பக்கம் ஒரு கடிதமிருந்தது. அது இரத்தச் சின்ன சங்கத்தின் கடிதம். அதில் எழுதி யிருந்ததாவது:- "உனக்கு கிரீன் வீடு நன்றாகத் தெரியும். கிரீன் படிக்கும் அறைக்கு கீழ் ஒரு அறை தரை மட்டத்திற்கு கீழ் உண்டு. அவ்வறைக்கு தோட்டத்திலிருந்து ஒரு வழியுண்டு. அவ்வழியாக அந்த அறையினுள் இந்த பெட்டியிலுள்ளதை கையில் வைத்து கொண்டு போயிரும். பின்னால் மற்ற விஷயம் தெரிவிக்கப்படும்" என்று எழுதி யிருந்தது. அந்த பெட்டியினுள் என்ன இருக்கிறதென்று பார்த்தாள். கையில் அணியக்கூடிய பெரிய உரை (குளவ்ஸ்) ஒன்று; அது இடது கையில் அணியக்கூடியது. ஒரு நீளமான கத்தி, மிக கூர்மையாக யிருந்தது. இந்த இரண்டையும் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். பிறகு எழுந்து டெலிபோனருகே போய் ஒரு நம்பரைக் கூப்பிட்டாள். அதிக நேரம் எதிர்பார்த்தும் பதில் வரவில்லை.

மணியைப் பார்த்தாள். 8-க்கு மேலாகி விட்டது. உடனே தனது கையில் கத்தியையும் குளவ்ஸையும் எடுத்துக் கொண்டு தனக்குமேல் ஒரு துணியை எடுத்து மூடிக்கொண்டு வெளிக் கிளம்பினாள்.

சுமார் அரைமணி நேரத்திற்குப்பின் இன்ஸ்பெக்டர் பென்டனும் ஸிம்ஸனும் கிரீன் வீட்டினுள் நுழைந்தனர். வேலைக்காரன் முன் கதவை திறந்துவிட, இருவரும் உள் ஹாலுக்கு சென்றனர். உள்ளே போனதும், வீடு பூராவும் எல்லா விளக்குகளும் வெளிச்சமாக எரிந்து கொண்டிருப்பதை ஸிம்ஸன் கவனித்தார். அவருக்கு கிரீனின் சிக்கன குணம் தெரியும். சாதாரணமாக ஹாலில் ஒரே ஒரு சிறிய விளக்கு எரிவது வழமை. மற்ற அறைகளெல்லாம் இருட்டாகவே யிருக்கும். ஏதாவது ஒரு அறையில் வேலை யிருந்தால் அங்குள்ள விளக்குகளுள் ஒன்று எரியப்பட்டு, வேலை முடிந்ததும் விளக்கை இறுத்தப்படும். அப்படி வழமை யிருக்க, தற்போது இவ்வாறு எல்லா விளக்குகளும் எரிவதைப்

பார்த்து ஆச்சரியமானர். ஹாலின் பக்கத்தில் ஒரு புஸ்தக அறை இருந்தது. அதிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்த அறையின் கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. அந்த அறையினுள் ஒரு மேஜையின்முன் நாற்காலியில் கிரீன் உட்கார்ந்து கொண் டிருந்தார். அவர் மிக களைத்தவரைப்போலிருந்தாலும் முகத்தில் சந்தோஷம் தோன்றியது.

அவர் வந்த இருவரைப் பார்த்ததும் "வாருங்கள்! நான் ஒரு சிறிய சமாச்சாரம் சொல்லப்போகிறேன். அதைக் கேட்டதும் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நான் போலீஸ் கமிஷ்னரையும் கூப்பிட்டிருக்கிறேன். ஏனெனில் இவ்விஷயத்தில் ஒவ்வொருவரும் முன்பே ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நீங்களிருவரும் கூட ஜாக்கிறதையாக யிருக்கவேண்டும். நீங்களும் இவ்வீட்டை விட்டு வெளியே போனதும், உங்களுக்கு ஏதாவது நேரிடக்கூடும். நமது இரகசியத்தை அதிக பேர்களுக்கும் தெரிவிக்கக்கூடாது. நீங்கள் இருவரும் உங்கள் ஓவர்கோட்டை கழட்டி வையுங்கள். நான் சொல்லப்போகும் கதை கொஞ்சம் பெரியதாக யிருக்கும்" என்ருர் கிரீன்.

அச்சமயத்தில் டெலிபோன் மணி அடிக்கவே, கிரீன் எடுத்து கேட்டார் "யார்? கமிஷ்னரா? இதோ கொஞ்சம் பொறுங்கள். ஒரு முக்கியமான சமாச்சாரம் சொல்லவேண்டிய திருக்கிறது" என்று சொல்லி, டெலிபோனை பக்கத்தில் வைத்து விட்டு, அங்குள்ள இருவரைப்பார்த்து, "நீங்கள் இந்த அறையின் கதவை மூடிக் கொண்டு, அந்த ஹாலிலிருங்கள். கமிஷ்னருக்கு தெரிவித்தபின், 5 நிமிஷத்தில் உங்களையும் கூப்பிட்டு, இரகசியத்தை தெரிவிக் கிறேன்" என்ருர்.

ஸிம்ஸன் சிறிது தயங்கினர். இன்ஸ்பெக்டர் பென்டன் உடனே எழுந்து ஹால் பக்கம்போனர்.

"இந்த இரகசியம் இரத்தச் சின்ன சங்கத்தைப் பற்றியா?" என்று ஸிம்ஸன் கேட்டார்.

"சிறிது நேரத்தில் தெரிவிக்கும் போது, எல்லாம் தெரியும்"

ஸிம்ஸன் சிறித்தார். இதற்கிடையில் பென்டனும் சிறித்த வாறு ஹாலண்டை வந்தார்.

"எந்த கதையும் எனக்கு ஆச்சரியமாகத் தோன்ருது" என்று சொல்லிக்கொண்டே ஸிம்ஸனும் அறையின் கதவண்டை வந்து கதவை மூடிக்கொண்டே, "உங்கள் கதைக்குப்பின் நானும் குளோரி யாவைப்பற்றி சிறிது சொல்கிறேன். குளோரியா என்றதும் உங்கள்

முகத்தில் வெறுப்பு தோன்றுகிறதே. எனது கதையை கேட்டால் அது எவ்வளவு அதிசயமான தென்று தெரியும்'' என்று சொல்லிக் கொண்டே, கதவை நன்ருக மூடினுர்.

"இன்ஸ்பெக்டர்! அவர் என்ன சொல்லப் போகிருரென்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் கமிஷ்னரிடம் என்ன பேசப் போகிருர்?'' என்று கேட்டுக் கொண்டே பென்டனிடம் நெருங் கினுர். இதற்கிடையில் அங்கு கிரீனின் வேலைக்காரன் வரவே, அவனிடம் "என்னப்பா! இங்கு எல்லாம் நூதனமாக யிருக்கிறதே'' என்று ஸிம்ஸன் கேட்டார்.

"ஆமாம் ஸார், எங்கள் எஜமானர் எலக்ட்ரிக் கரண்ட் விஷய மாக எப்பொழுதும் சிக்கனமாகத் தானிருப்பார். இன்று என்னமோ, எல்லா விளக்குகளையும் ஏற்றி வைக்குமாறு உத்தர விட்டார். தான் ஜாக்கிரதையாக யிருக்கப்போவதாகவும் சொன்னுர். எதற்காக வென்று விளங்கவில்லை. அதுவுமல்லாமல் இரண்டு கைத் துப்பாக்கிகளையும் தனது ஜேபியில் வைத்திருக்கிருர்'' என்ருன்.

"அவர் கைத்துப்பாக்கி வைத்திருப்பது உனக்கு எப்படி தெரியும்?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"அந்த துப்பாக்கிகளினுள் ரவை நான் தான் நிறப்பினேன். அதில் ஒரு துப்பாக்கி என்னுடையது'' என்ருன்.

ஸிம்ஸன் தலையை ஆட்டிக்கொண்டே, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "அவருக்கு இரத்தச் சின்ன சங்கத்தைப்பற்றி சாமாச் சாரம் எதும் தெரிந்திருக்கலாம். அதுவுமல்லாமல் ஏதோ ஒரு அபாயத்தையும் எதிர்பார்க்கிருர் போலும். எதற்கும் உங்கள் போலீஸ் ஆட்கள் யாரும் அருகே யிருக்கிருர்களா?'' என்று கேட்டார்.

இன்ஸ்பெக்டர் அதற்கு "ஆம் இரண்டு பேர் இந்த தெருவில் நிற்பார்கள். அவர்களை கூப்பிட்டால் வருமாறு எச்சரிக்கை செய் திருக்கிறேன்'' என்ருர்.

அறையினுள்ளிருந்து கிரீன் டெலிபோனில் பேசும் சப்தம், கதவு மூடப்பட்டிருந்ததால் ஒன்றும் கேட்கவில்லை. இவர்கள் வெளியே நின்று ½ மணி நேரம் ஆகிவிட்டது. ஸிம்ஸன், அங்கு வந்த வேலைக்காரனிடம் "உன் எஜமானிடம் போய், நாங்கள் உள்ளே வரலாமா என்று கேள். அதிக நேரமாய் விட்டது'' என்ருர்.

"நான் போய் சொன்னுல் கோபிப்பார். நீங்களே, யாராவது போங்கள்'' என்ருன்.

உடனே பென்டன் அறையினண்டை போய் கதவை திறந்து உள்சென்றவர், அங்கேயே ஸ்தம்பித்து நின்று விட்டார். எதிரே நாற்காலியில் கிரீனின் உடம்பு குழைந்து கிடந்தது. இடது மார்பில் ஒரு கத்தி குத்தப்பட்டு, கத்தியின் கைப்பிடி வெளியே தெரிந்தது. மேஜையில் கையில் அணியும் உரை (குளவ்ஸ்) இரத்தக் கரையுடன் கிடந்தது. விளக்குகளெல்லாம் முன்பிருந்த வாறே பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருந்தன.

இவைகளைப் பார்த்த பென்டன் தன்னை யறியாமல் சப்த மிட்டதைக் கேட்ட ஸிம்ஸனும் அறையினுள் ஓடி வந்தார். இருவரும் கிரீனின் நிலைமையைப் பார்த்து யாதும் ஒரு வார்த்தையும் பேசமுடியவில்லை.

பிறகு பென்டன் திரும்பி, "எனது ஆட்களைக் கூப்பிடுங்கள். இவ்வீட்டிலிருந்து யாரும் வெளியே போகக்கூடாது. வேலைக் காரனிடம் மற்ற வேலைக்காரர்களை யெல்லாம் சேர்த்து சமைய லறையில் இருக்குமாறு சொல்லுங்கள்" என்றார்.

அறையினுள் எல்லா பாகத்தையும் கவனித்தார். அறையின் ஜன்னல்களுக்கு வெல்வட் திறைகள் போடப்பட்டிருந்தன. அவைகளை நீக்கி பார்க்க, அதன் கதவுகளெல்லாம் ஒழுங்காக பூட்டப் பட்டிருந்தன. "கிரீன் எவ்வாறு கொல்லப்பட்டார்? கொலை பாதகன் எவ்வழியாக வந்தான்? கை உரை (கிளவ்ஸ்) எதற்கு?" இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக யோசித்துக் கொண்டே, கிளவ்ஸை எடுத்துப் பர்த்தார். அது பழையதாகவும், சாதாரணமாக கார் டிரைவர்கள் அணியும் உரையாக யிருந்தது.

இனி கமிஷ்னருக்கு தெரியப்படுத்த வேண்டியதென்று டெலிபோனை எடுத்தார். தான் சந்தேகித்தபடி, கமிஷ்னர் டெலி போனிலேயே கிரீன் பேசுவாரென்று காத்துக் கொண்டிருக்கிறார்.

"கிரீன் உங்களிடம் பின் பேசவில்லையா" என்று பென்டன் கேட்டார்.

"இல்லை என்ன நேர்ந்தது?"

பென்டன் கமிஷ்னருக்கு இங்கு நடந்ததை யெல்லாம் விபரித்து விட்டு, ஹாலுக்கு வந்தார். அங்கு தனது போலீஸ் ஆட்கள் இருவரைப் பார்த்தார்.

"நான் எல்லா அறைகளையும் பார்த்து வருகிறேன்" என்று சொல்லி சென்ற பென்டன், சுமார் அரைமணி நேரத்திற்குப்பின் ஹாலுக்கு வந்தார். அவரைப் பார்த்த ஸிம்ஸன் "என்ன?" என்று ஆவலுடன் கேட்டார்.

"ஒன்றுமில்லை, இங்கு யாரும் வெளியாட்கள் வந்ததாக தெரியவில்லை. எப்படி யாரும் அந்த அறைக்கு போயிருக்க முடியும்?" என்று பென்டன் கேட்டார்.

"அங்கே தரையில் ஏதாவது இரகசியவழி யிருக்குமோ" வென்று ஸின்ஸன் கேட்க, "இந்த ஊரில் முன் அறைகளில் இரகசிய வழி வைப்பது வழமை யில்லை" என்று பதில் சொல்லி விட்டு, "எதற்கும் சோதித்து பார்க்கலாம்" என்று அவ்வறைக்குப் போய் கீழே விரிக்கப்பட்டிருந்த ரத்னக் கம்பளங்களை எடுத்துப் பார்த்தனர். ஒரு மூலையில் தரையில் ஒரு கதவைப் போல் தெரிந்தது. உடனே வேலைக்காரனை கூப்பிட விட்டு, அதைக்காட்டி கேட்டனர். யுத்த காலத்தில் பாம் விழும்போது, தன்னை பாதுகாக்க அவ்வறையின் கீழ் ஒரு அறை கிரீன் கட்ட ஏற்பாடு செய்ததாகவும்; இந்த இரகசிய கதவை திறந்தால் படிக்கட்டுகள் தோன்று மென்றும் அவ்வழியாக கீழ் அறைக்கு போகலா மென்றும் வேலைக்காரன் தெரிவித்தான்.

உடனே அந்த கதவை திறந்து கையில் ஒரு மெழுகு வத்தி எரிய வைத்துக் கொண்டு, படிக்கட்டுகளின் வழியாக பென்டன் இறங்கினர். கீழேயுள்ள அறைக்கு வந்தார். அது ஒரு சிறிய சதுரமான அறையாக யிருந்தது. அவ்வறையில் இன்னொரு கதவு யிருந்தது. அந்தக் கதவு மூடப்பட்டிருந்தது. கிரீனின் ஜேபியில் தேடிப்பார்க்க ஒரு சாவி அகப்பட்டது. இதைக்கொன்டு ஷெ கதவை திறக்க, வீட்டின் பின்புற தோட்டம் தெரியலாயிற்று. இதைப் பார்த்ததும் ஸிம்ஸன் "யாரும் இவ்வழியாக எவர் கண்ணுக்கும் அகப்படாமல் வருவது சுலபமாக தெரிகிறது. கொலையாளி இவ்வழியாகத்தான் வந்திருப்பானென்று நினைக்கிறேன்" என்றார். தனது கையிலுள்ள டார்ச் (விளக்கு) உதவியால் அங்கு தரையை கவனித்தார். திடீரென்று கீழே குனிந்து "இதோ ஒரு காலடி புதிய பதிவு தெரிகிறது. ஒரு பெண்ணின் காலடி" என்றார். இன்ஸ்பெக்டர் பென்டனும் அதை கவனித்து "ஆம். ஒரு பெண்ணின் காலடி. புதிய பதிவு" என்று சொல்லிக் கொண்டே யோசித்தார். அது குலோரியாவின் காலடி என்று பென்டன் அறிந்தார்.

(தொடரும்.)

# திரளாய் கூடுவீர்!

[வேளாங்கண்ணி கவிஞர் சாந்தி தாசன்]

படம்:-சொர்க்கவாசல் இசை:-நிலவே நிலவே

பல்லவி

திரளாய்-திரளாய் கூடுவீர்
திருமறை வேதம் முழக்குவீர்
அறவாழ் வளித்த நபிநாதர்
அம்போதம் போன்றே திகழுவீர் (திர)

அநுபல்லவி

இருளினை மாய்க்கும் இதயம் கொண்டீர்
இனிமைக்குவிந்த செயலை விண்டீர்
மருளற மதியின் தெளிவுடையோர் நீர்
மங்கி சிதைந்து வீழ்வதா? (திர)

இருபத்தி ஐந்து ஆண்டுகளில்-நேர்
இயங்கும் சகாப்தம் நிலவிடப்பேர்
நிறுவியநுங்கள் நிம்மதிகுலைந்து
நிர்க் கதியுற்று மாள்வதா? (திர)

பொறுமையின் சாதனை புறக்கணித்தே
போற்று தற்குரிய திறன் தளர்ந்தே
வறுமையும், வஞ்சம் மிகப்படர்ந்தே
வழிநிறை செம்மை இழப்பதா? (திர)

ஒன்றே குலமென்னும் அடிப்படைக்கோர்
ஒப்புயர் வற்றே மிளிர்ந்திடுவீர்
நன்றென சாந்தி தாசன் தரும் இதை
நினைவினிலிறுத்தி முனைகுவீர் (திர)

# பத்ஹுர் ரஹ்மான்
# பில்பிக்ஹின் நுஃமான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜனமில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர் பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லி முடையவும் கடமையாகும். இது தான் இம்மை, மறுமை இரு லோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை ஜும்மா மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அரபியிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.

இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி

விலை ரூ. 5

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

(8-வது பகுதி)

# திருக் குர்ஆன் :: :: சாரசங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## ஈமானுடையோர்க்கு இகத்திலும் பரத்திலும் சகாயம்

(இறைவனுகிய) யாம், திருத்தூதர்களுக்கும் ஈமான் உடைய (நல்ல)வர்களுக்கும், உலக சம்பந்தமாய் இகவாழ்விலும், பின்னர் அவர்கள் (கியாமத்து நாளில்) சாக்ஷியம் அளிப்பதற்காக (அன்னியர்களை விட்டுப் பிரிந்து) எழுந்து வருங்கால், பரத்திலும் நாம் சகாயங்கள் செய்கின்றோம். அந்த (சோதனை) நாளில், வழிப்படாத பாபிகள் கூறும் சாக்குப்போக்குகள் யாதொரு பயனையும் தரமாட்டாது. அவர்கள் மீது (இழிவு எனும்) லஃனத்தே உண்டாகும். அன்னோர்க்கு இல்லங்களில் மகாகேடானதே (நரகமே) கிடைக்கும். (ஸூரா: மூஃமின்; ருகூ: 6.)

## வானமும் பூமியும் எங்ஙனம் பிரபஞ்சத்தில் உண்டாயின

(ஏ நபியே), நீவிர் ஜனங்களுக்கு (இவ்வாறு) கூறிவிடுவீராக: (ஏபாமரர்களே;) பூமியனைத்தையும் இரண்டே நாளில் உற்பத்தி செய்த (மகா சக்தியுடையவனுகிய) இறைவனைப்பற்றி நிராகரிப்பு செய்கிறீர்களா? அப்படிப்பட்ட சர்வலோக இரக்ஷகனுகிய நாயனுக்கு நீங்கள் இணை சேர்த்துவைப்பது மிகப்பேராச்சரியமாகும். அவனே பூமியைப் படைத்து அதன் மீது (முளையாக) மலைகளை ஸ்திரப் படுத்திவைத்தான். அந்தப் பூமியில் எல்லா விதமான (விளைச்சல் சம்பந்தமான) அபிவிருத்திகளை ஆக்கி வைத்தான். அந்த உற்பத்தி கட்டுத்திட்டத்தையும் ஏற்படுத்தி வைத்தான். இதெல்லாம் (சில) நான்கு தினங்களிலே (அவன் சக்தியால்) உண்டாய் விட்டன. இது கேட்பவர்களுக்கு பதிலாகவு மாய்விட்டது. அதன்பின் இறைவன், வானத்தின் பக்கம் கவனம் செலுத்தினுன். அப்போது அது வெறும் ஆகாயப் புகையாய் இருந்தது. எனவே அவ்விறைவன் வானத்தையும் பூமியையும் நோக்கி "நீங்கள் (சிருஷ்டிப்பில்) வாருங்கள்; சந்தோஷமாகவா, சந்தோஷ மில்லாமலா?" என்று வினவினுன். "நாங்கள் உன் கட்டளைப்படி சந்தோஷமாகவே (சிருஷ்டிப்பில்) வருகிறோம்" என்று கூறின. அதன்பின் இறைவன், (புகைமயமாய் இருந்த ஆகாயத்தை) ஏழு (தள) வானங்களாக்கி வைத்தான். ஒவ்வொரு வானத்திலும் (பூமியிலுள்ளோரின்) விதிப் பலாபலன்

களின் நிர்வாகத்தையும் ஆக்கி நடைபெறச் செய்தான். எனவே (இறைவனாகிய) யாம், வானவிதானத்தை, நட்சத்திரங்களைக்கொண்டு அலங்காரம் செய்து வைத்தோம். மேலும் அதனை (ஷைத்தானுடைய தீங்குகளை விட்டும்) காப்பாற்றியும் வைத்தோம். எனவே, (வானம், பூமி, பிரபஞ்சம் ஆகிய) அவை யாவும், மகாப் பலவானும் புத்திமானுமாகிய இறைவனால் நிலைநிறுத்தி வைக்கப்பட்டவைகளாகும். (ஸூரா: ஹாமீம் ஸஜ்தா; ருகூ: 2.)

## பக்திவான்களுக்கு தேவதூதர்களின் ஆசிச் செய்தி

"அல்லாஹ் (தஆலா)வே எங்களுடைய இரக்ஷகன்" என்று (வாயினாலும் மனத்தாலும்) உறுதி கூறி, அந்த பக்தி (மார்க்கத்தின்) பால் ஸ்திரமாக நிலைத்திருந்தார்களே அப்படிப்பட்டவர் (பக்திவான்)கள் மீது, (மரணகால பரியந்தம்) மலக்குகள் (ஆசிச்செய்தி கொண்டு) இறங்கி வருகிறார்கள். (அங்ஙனம் வந்து "பக்தர்களே,) "நீங்கள் பயப்படாதீர்கள்; எத்தகைய மனோசஞ்சலமும் கொள்ளாதீர்கள். உங்களுக்காக (இறைவனால்) வாக்களிக்கப்பட்ட சுவர்க்க லோக (இன்ப)த்தைப் பற்றிய நற்செய்தியை செவியேற்று (கேட்டுக்) கொள்ளுங்கள். உங்கள் உலக வாழ்க்கையில் நாங்கள் (இறைவனின் கட்டளைப்படி) உங்களுக்கு உபகாரிகளாக இருந்து வந்தோம்; ஆகிரத்தாகிய (இகலோக) வாழ்விலும் நாங்கள் (உங்கள் உபகாரிகளாக) இருப்போம். நீங்கள் கேட்பவைகள் யாவுமே, உங்களுக்காக சுவர்க்க லோகத்தில் (தயாராய்) இருக்கின்றன. மேலும் எதை நாடியபோதிலும் அதெல்லாம் அங்கு உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும். இதானது, மன்னித்து அருள் புரிபவனாகிய இறைவனின் சார்பாக உங்களுக்குரிய ஓர் அரிய விருந்துபசாரமாகும்" என்று ஆசி கூறுவர். (ஸூரா: ஹாமீம் ஸஜ்தா; ருகூ: 4.)

## புத்திரச் செல்வம் அளிப்பவனும் அல்லாஹ்வே

வானத்துடையவும் பூலோகத்துடையவும் ஆட்சி பாரமெல்லாம் அல்லாஹ்வுடைய ஆதிக்கத்திலேயே இருக்கின்றன. அவன் நாடியவைகளையெல்லாம் (சுயமே) சிருஷ்டித்து விடுகிறான். அவன் நாடியபேர்களுக்கெல்லாம் புத்திர சந்தானம் அருள் புரிகின்றான். அதில், ஆண்பிள்ளை-பெண்பிள்ளை என இரண்டுவகையான சந்தான பாக்கியத்தையும் அளிக்கின்றான். இன்னும் அவன் (இஷ்டமின்றி) நாடிய பேர்களை புத்திரச் செல்வமற்ற (மலடான)வர்களாகவும் செய்து விடுகின்றான். மேலும் சந்தேகமேயில்லாமல், அ(வ்விறை)வன் யாவும் அறிந்தவனாகவும், சகல சக்தியாளனாகவும் இருக்கின்றான். (ஸூரா: ஷூரா; ருகூ: 9.)

## ஈமானுடையவர்களுக்கு சுவர்க்கத்திலுள்ள சுகபோகம்

உங்களுடைய இறைவன் (அல்லாஹு தஆலா) மறுலோக (ஆகிர)த்தில், தன்னுடைய, (ஈமான் கொண்ட) நல்லடியார்களை நோக்கி "என்னுடைய அடியார்களே, இன்று உங்கள் மீது எத்தகை அச்சப்பாடும் கிடையாது; நீங்கள் எதனை முன்னிட்டும் சஞ்சலமடையவும் வேண்டாம்: ஏனெனின் நீங்கள் (உலக வாழ்வில்) எங்களுடைய (ஆயத்துகளாகிய) அத்தாக்ஷிகள் மீது நன்னம் பிக்கை கொண்டிருந்தீர்கள்; முஸ்லிம்களாகவும் இருந்தீர்கள். எனவே, (இப்போது) நீங்களும் உங்கள் மனைவிமக்களும் (குடும்ப சமேதராய்), சகல கௌரவச் சிறப்புடன், சுவர்க்கத்தில் பிரவேசித் திருப்பீர்களாக" என்று சொல்வான். அன்னவர்களுக்கு அங்கு, தங்கத்தாலான (உணவுத்) தட்டுகளும், (பானகம்செய்யும்) கிண்ணங் களும் (நிறைய நிறைய) அருளப்படும். அவைகளைக் கொண்டு அவர்கள் இஷ்டபூர்த்தி யடைவார்கள்: (மனம்) குளிர்ந்து இருப் பார்கள். சுவர்க்கத்தில் இருப்பார்கள். "நீங்கள் இங்கு சாஸ்வ தமாக எப்போதும் இருங்கள். இதானது, நீங்கள் உலகில் நல் அமல்களாக அனுஷ்டித்தீர்களே, அவைகளுக்காக உங்களை (இந்த சுகபோகங்களுக்கு இறைவன்) வாரிஸ் (பாத்தியதைக்காரர்) ஆக்கி வைத்தான். மேலும் உங்களுக்கு அபரிமிதமாக (இனிய) கனிவர்க்கங்களும் கிடைக்கும்" என்று கூறப்படும். அவைகளி னின்று நீங்கள் புசித்து சுவைப்பீர்கள். ஆனால் (உலகில்) பாபி களாக இருந்து உழன்றூர்களே அவர்கள், எப்போதும் நரக வேதனை யில் கிடந்துழன்று கொண்டு இருப்பார்கள். (ஸூரா: ஜுக்ரப்; ருகூ: 7.)

## மனிதர்களும் ஜின்வர்க்கமும், வணங்கவே படைக்கப்பட்டனர்

(இறைவனாகிய) யாம் ஜின் (பூத) வர்க்கத்தையும் மனிதர் இனத்தையும், (அன்னோர்) எம்மை(த் தொழுது) வணங்குவதற் காகவே படைத்தோம். ஆனால் யாம், அவர்களிடத்திலிருந்து எத்தகைய தேவையையும் (வேண்டி) எதிர்பார்த்துக் கொண்டிருக்க வில்லை; அவர்கள் எமக்கு உணவு சாதனமளிக்க வேண்டாம்; யாமே அவர்களுக்கு உணவு சாதனம் (ரிஸ்க்) அளித்து ஆதரிப்பவரா யிருக்கின்றோம்.... நிச்சயமாக அல்லாஹு தஆலா மகாப்பெரும் உணவளிப்பவனாகவும், மகத்தான சர்வ சக்தியாளனாகவும் இருக் கின்றான். (ஸூரா: தாரியாத்; ருகூ: 3.)

187044

# கீமியாயே ஸஆதத்து

## தமிழ் பொழிப்புரை.

1-வது, 2-வது, 3-வது, 4-வது ஆக 4-வால்யங்கள்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன :—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னையொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வரவைக்கும்.

2-வது, அநாதார பதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது, இகபரங்கள் இன்னதென்றறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கா திருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்ருது இவைகளின் அஹ்காம்களும் அஸ்ருருகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை, கிதாபை பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயான் அடங்கி யிருக்கின்றது.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு
விலை ரூ. 3—0—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# "வின்ஸ்டன் சர்ச்சில்"

(முஹம்மது தாவூது)

## (3—வது பகுதி)

போயர்களின் தலைநகரான பிரிடோரியாவுக்குக் கைதியாக சர்ச்சில் கொண்டு செல்லப்பட்டார். சில தினங்களுக்குப் பிறகு அவர் தப்பியோடி விட்டார். அதிர்ஷ்ட வசமாக, ரயில் வண்டி அவருக்கு உதவியாகக் கிடைத்தது. சாமான் ஏற்றிச் செல்லும் வண்டியில் தொத்திக் கொண்டு, முன்னூறு மைல்களுக்கு அப்பாலுள்ள சமீபத்திய போர்த்துகீஸிய கிழக்கு ஆப்ரிக்காவை அவர் அடைந்தார். அங்கிருந்த பிரிட்டிஷ் கான்ஸலைப் போய்ப் பார்த்த போது, கப்பல்களி லொன்றைச் சேர்ந்த தீயணைப்பவர் (Fireman) என அவர் கருதப்பட்டார். தான் பத்திரமாக வந்து சேர்ந்தது பற்றி போயர் யுத்த மந்திரிக்கு அவர் தந்திச் செய்தி யொன்று அனுப்பினர்.

இதற்கிடையில், அவரைத் திரும்பவும் கைதியாக்குவதற்கு போயர்கள் எல்லா முயற்சிகளும் செய்து பார்த்தனர். தப்பியோடி விட்ட யுத்தக் கைதியை உயிருடன் பிடித்துக் கொடுத்தாலும், மற்ற எந்த விதத்திலும் அவரைக் கைது செய்து விட்டாலும் இருபத்தைந்து பவுன் சன்மானம் வழங்கப்படுமென அறிவித்துத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் பட்டிருந்தன. பின் கண்ட வர்ணனை சர்ச்சிலுக்கு எப்போதும் எரிச்ச லுண்டாக்குவதாக விருந்தது.

ஆங்கிலேயன், இருபத்தைந்து வயது, ஐந்து அடி எட்டு அங்குல உயரம், சம நிலையான தேகக்கட்டு, முன் புறம் குனிந்து நடப்பவன், மங்கல் வெளுப்பான தோற்றம், செம்பட்டை மயிர், சிறிய, எளிதில் தெரிந்து கொள்ள முடியாத மீசை, மூக்கால் பேசுபவன் "S" என்னும் எழுத்தைச் சரியாக உச்சரிக்க முடியாதவன்.

இந்த சுருக்கமான சன்மான அறிக்கையைத் தயாரித்த உத்தியோகஸ்தரான டீ ஹாஸ் பின்னர் "ராய்ட்டர்" நிருபரானர். சர்ச்சிலின் விவாக வைபவத்தின் போது அவருக்கு டீ ஹாஸ் சிறு வாழ்த்துச் செய்தி யொன்று அனுப்பி வைத்தார். இந்த வாழ்த்துக்கு சர்ச்சில் அளித்த பதிலில் பின் வருமாறு காணப்பட்டது:—"பரிசின்

மதிப்பை அதிகமாக மதிப்பிடாமல் ஐம்பது பவுன் சன்மானம் தருவதாக நீங்கள் அறிவித்திருக்கலாம் என நான் நினைக்கிறேன்.''

பிரிட்டிஷாருக்குப் பாதகமாக போர் நீடித்து வந்தது. சர்ச்சிலின் வீரதீரச் செயலின் காரணமாக அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. டர்பனுக்குக் கப்பலில் அவர் புறப்பட்ட போது பிரிட்டிஷ் காலனி மக்கள் அவருக்குக் குதூகல வழியனுப்புபசாரம் செய்தனர். துறைமுகத்திலிருந்த எல்லாக் கப்பல்களும் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. அநேக சிறு கப்பல்கள் திரளாகக் கூடி யிருந்தன. மணிகளும் ஊது குழல்களும் சங்குகளும் ஏககாலத்தில் ஒலித்தன. அவரது கப்பல் புறப்பட்ட சமயத்தில் துறைமுக மேடையில் மூன்று பாண்டு வாத்தியங்கள் முழங்கின. சர்ச்சிலுக்கு அதிர்ஷ்ட காலம் வந்து விட்டது. இந்த நாள் முதற் கொண்டு, அவர் அதிமுக்கியத்துவம் வாய்ந்த மனிதராகி விட்டார்.

சர்ச்சில் திரும்பவும் ராணுவத்தில் சேர்ந்தார். சம்பள மில்லாத லெப்டினென்டாகக் குதிரைப் படைத் தலைமையை அவர் ஏற்றுக் கொண்டார். இந்த ஏற்பாட்டின் மூலம் "மார்னிங் போஸ்ட்'' நிருபராக இருந்து நல்ல பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு அவருக்கு இருந்து வந்தது. போரில் அவர் வீரதீரம் காட்டிப் பிரசித்திப் பெற்றார். நகருக்குள் பிரவேசித்த முதல் குதிரை வீரர் இவர்தான். "மார்னிங் போஸ்டு''க்கும் சுவாரஸ்யமான தகவல்களை அவர் அனுப்பி வந்தார். ஒரு சமயம், ராணுவத்துக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டிருந்த ஒரு சோல்ஜரைப் பற்றிய தகவலை அவர் அனுப்பி யிருந்தார். இவ்வாறு ஒதுங்கி, ஒளிந்துக் கொண்டிருப்பதன் காரணம் என்ன என ஜெனரல் வினவிய போது, அந்த சோல்ஜர் பின்வருமாறு பதில் அளித்தாராம்:- "நான் முக்கிய மில்லாத மூன்றாந்தர மனிதனாக இருப்பதே காரணம்'' அந்த ஜெனரல் இவ்விசித்திர சமாதானத்தைக் கேட்டதும் பின் கண்டவாறு கூறினாராம்:- "அது மிகவும் பரிதாபமான விஷயம். உன்னைச் சக்தியுடையவனாக்குவதற்கு, இப்போதிருப்பதை விட மூன்று மடங்கு அதிகமாக எதிரியை நெருங்கி யிருக்குமாறு செய்ய வேண்டும். முன்னேறிச் செல்.''

பிரிடோரியா கைப்பற்றப்பட்டதும், ஓல்டுஹாமுக்குத் திரும்பி சமீபம் நடைபெற விருந்த பார்லிமெண்டரி தேர்தலில் அபேக்ஷகராகப் போட்டியிடலாம் என சர்ச்சில் முடிவு செய்தார். ஓல்டுஹாமை வந்தடைந்ததும் அவரை வரவேற்கும் முறையில் எல்லா பாண்டு வாத்தியங்களும் முழங்கின. நகர மண்டபத்தில் தமது முதல் பிரசங்கம் நிகழ்த்துவதற்காகத் திறந்த வண்டியில் அவர் சென்றபோது வீதிகளின் இருபுறங்களிலும் திரளாக மக்கள் கூடியிருந்து

சந்தோஷ ஆரவாரம் செய்தனர். இந்தத்தடவையும் அவரது தேர்தல் பிரசாரம் நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும் சில ஓட்டுகள் வித்தியாசத்தில் சர்ச்சில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாருக 1900ம் ஆண்டில் தமது இருபத்தாருவது வயதில் அவர் பொது வாழ்வில் அரசியல் அரங்கில் பிரவேசித்தார்.

அந்த சமயத்தில் பார்லி மெண்டு அங்கத்தினர்களுக்குச் சம்பளம் கிடையாது. எனவே பணம் சம்பாதிப்பதே அவரது அடுத்த நடவடிக்கையாக விருந்தது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சுற்று பிரயாணம் செய்து பிரசங்கங்கள் நிகழ்த்துவதற்கு அவர் ஏற்பாடு செய்தார்.

சர்ச்சிலின் மேடைப் பிரசங்கம் அவரது எதிரிகளையும் அவரைக் 'காப்பி' யடிப்பவர்களையும் பொருமைப் படச்செய்யும் விதமாக விருந்தது. அவரது பேச்சு நடையில் நம்பிக்கைத்தொனித்த போதிலும், தாழ்மையான வேண்டுகோள் விடுக்கும் தோரணையிலும் இருந்தது. விசேஷ நிபுணர்களாலும் பழக்கத்தாலும் தீர்க்க முடியாமற்போன கொன்னலின் காரணமாக, கூடுமானவரை வாக்கிய இறுதியில் "S" என்னும் எழுத்தை அவர் தவிர்த்து வந்தார். எப்போதாவது தற்செயலாக அந்த எழுத்து வாயிலிருந்து வந்துவிடுமானல் துக்கத்தோடும் சிறுபிள்ளையின் தோரணையிலும் அதனை அவர் உச்சரிப்பார். ஆனல் அவரது நிஷ்கபடமான பேச்சும் கடுமையான தோரணையுமே அவரது பலம். தமது வார்த்தைகளில் அவருக்கிருந்த தெளிவான நம்பிக்கை ஒருபோதும் மிஞ்சப்படவில்லை.

சர்ச்சிலின் இங்கிலாந்து சுற்றுப்பிரயாணம் உடனே வெற்றியளிப்பதாக விருந்தது. ஆனல், அமெரிக்காவில் அவருக்கு எதிர்பாராத கஷ்டம் சம்பவித்தது. இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்குமிடையே உறவு மோசமான நிலையில் இருந்தது. எனவே, போயர்கள் வெற்றி பெறுவர் என ஐரிஷ்-அமெரிக்கர்கள் நம்பிவந்தனர்: சிகாகோவில் பிரசங்கியை அலைக்கழிக்கும் நோக்கத்துடன் ஐரிஷ் தொழிலாளர்கள் ஒன்றுகூடி யிருந்தனர். ஒவ்வொரு தடவையும் சுவாரஸ்யமான முக்கிய தகவலை அவர்கூறும் போது அவர்கள் ஊளையிட ஆரம்பித்தனர். இந்த இடைஞ்சல்களையும் இடைமறிப்புகளையும் பொருட்படுத்தாமல், தைரியமாகத் தமது குரலை உயர்த்தி அவர் சொன்னர். "இத்தவிதமான நம்பிக்கையற்ற நிலை இருந்து வந்த போது, டப்ளின் துப்பாக்கி வீரர்கள் வந்தார்கள். போர் முரசு கொட்டப்பட்டது; களத்திலிருந்து எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டனர்" ஊளைசப்தம் மங்கியது, கூட்டத்தில் குழுமியிருந்தோர் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். அதற்குபிறகு, சுற்றுப்பிரயாணம்

சுமுகமாகவே இருந்து வந்தது. டப்ளின் வீரர்களைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபித்தமையால், ராணுவ சரித்திரத்திலே அதிக கஷ்டத்துக்குள்ளான படை அது என தோன்றுமாறு அவர் செய்தார்.

சர்ச்சிலின் சுற்றுப்பிரயாணம் கடுமையானது. ஞாயிற்றுக் கிழமை தவிர வாரத்தின் மற்றெல்லா நாட்களிலும் அவர் பிரசங்கங்கள் நிகழ்த்தி வந்தார். ஐந்து மாதங்களுக்கும் அதிகமாக அவரது பிரசங்க சுற்று பிரயாணம் நீடித்தது. இதன் மூலம் கிடைத்த ஏராளமான பணத்தை அரசியல் தாக்குதலில் அவர் செலவிட்டார்.

பார்லிமெண்டில் அனுபவமில்லா அங்கத்தினர்களைத் தாராளமாகப் பேசவிட்டுத் தவறிழைக்கும்போது கண்டிக்கும் போக்கை முதியவர்கள் அனுஷ்டிப்பது வழக்கமாக விருந்தது. ஆனால் சர்ச்சிலிடம் இந்த பாச்சா பலிக்கவில்லை. முதல் தடவையாகச் சபையில் பிரவேசித்ததும், தமது தந்தை, முன்பு அமர்ந்திருந்த ஆசனத்துக்கு நேராகச்சென்று அங்கு அமர்ந்துகொண்டார். குறிப்பு எழுதி வைத்துக் கொள்வதற்காக பல குறிப்பு புத்தகங்களையும் விஷய விளக்க நூல்களையும் தம் முன் வைத்துக் கொண்டார். மூன்றாவது நாள் சர்ச்சில் தமது முதல் பிரசங்கம் நிகழ்த்தினர்.

ஆரம்பத்தில் அவரது பேச்சு மோசமாக விருந்தது; கொன்னல் காணப்பட்டது. சங்கோஜப் பேர்வழியாகவும் தம்மை அவர் காட்டிக் கொண்டார். அவரது ஆரம்பப் பிரசங்கம் பற்றி ஒரு பிரமுகர் கூறுவதாவது: சரியான பதம் தேடுவோரைப் போல அங்கும் இங்கும் அவர் தடுமாறி, தாமதித்துப் பேசினர். ஆனால் அவர் எவ்வளவு தடுமாறினரோ, தாமதித்தாரோ அவ்வளவு அதிகமாக அவரது குரலில் உறுதித் தன்மை காணப்பட்டது. சபை முழுவதும் அவரது பேச்சுக் கேட்கும் என்பது பற்றிக் கேட்போரிடையே சந்தேகமே இல்லாதிருந்தது.

பின்னர் நிகழ்த்திய பிரசங்கங்களில் நகைச் சுவையை அவர் அதிகம் பிரயோகித்தார். வெகு சீக்கிரம் சாதுரியமாகப் பேசும் திறமையுடைய பிரசங்கி என அவர் பெயர் பெற்றார். ஒரு சமயம் காரசாரமாக அவர் பேசிக் கொண்டிருந்த போது, அவரது பேச்சைக் கண்டிக்கும் வகையில் அங்கத்தினரொருவர் துள்ளி யெழுந்தார்; ஆனல் அவர் விக்கி விக்கிச் சில வார்த்தைகள் தான் கூறமுடிந்தது. இதன் பேரில் சர்ச்சில் பின் வருமாறு கூறி, அவரை அடக்கினர். "மேன்மை தங்கிய எனது நன்பர் தாம் எவ்வளவு தாங்க முடியுமோ அதை விட அதிகமாக கோபாவேசம் கொள்ளக்கூடாது."

மற்ற அங்கத்தினர்கள் பொருத்த மில்லாத, தமக்குப் பிடித்த மில்லாத வகையில் வார்த்தையாடும் போது சர்ச்சில் ஊளையிடுவார். இவ்விஷயத்தில் அவர் தன்னிகரற்றவர். ஒரு சமயம் அவர் தமது தலையை பலமாக அசைத்துச் சுளித்த முகத்துடன் இருந்தார். இதன் பேரில் ஆத்திர மடைந்த பிரசங்கி பின் வருமாறு குறிப்பிட்டார். "எனது சொந்த அபிப்பிராயத்தைத் தான் நான் வெளியிடுகிறேன் என்பதை மேன்மை தங்கிய எனது நண்பருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்." இதற்கு சர்ச்சில் அளித்த பதில் இது தான்: "எனது சொந்த தலையைத் தான் நான் அசைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை பிரசங்கிக்கு நான் ஞாபக மூட்ட விரும்புகிறேன்."

சில மனிதர்கள் தங்களைக் கஷ்டத்துக்குள் சிக்க வைத்துக் கொண்டு அமைதியைக் குலைத்து கவலைகைச் சிருஷ்டிக்கிறார்கள் என மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். இத்தகைய அசாதாரண மனிதர்களில் சர்ச்சில் தலை சிறந்தவர். பார்லிமெண்டு அங்கத்தினராகி ஒரு மாதம் முடிவதற்குள் கட்சித் தலைவர்களை அவர் அலைக்கழிக்க ஆரம்பித்து விட்டார். ராணுவச் செலவை அதிகரிப்பதற்கான உத்தேச திட்டத்தை அவர் வண்மையாக எதிர்த்தார். போயர்களுடன் சமரசம், சமாதானம் செய்து கொள்ள வேண்டு மென வற்புறுத்தினார். இன்னும் இதைப் போன்ற செயல்களில் ஈடுபட்டு தமது கன்ஸர்வேடிவ் சகாக்களுக்கு 'தலைவலி' அளித்து வந்தார். ஒரு நாள் அவர் தமது பிரசங்கத்தைத் துவங்கியதும் கன்ஸர்வேடிவ் கட்சியினர் அனைவரும் எழுந்திருந்து சபையை விட்டு வெளியேறினர். கூச்சலிட்டுக் கொண்டே வெளியே சென்ற அவர்கள் வாயிலில் சிறிது நேரம் நின்று சிறு பிள்ளைகளைப் போல அவரைப் பார்த்து கையாண்டி செய்தனர். காமன்ஸ் சபையின் வரலாற்றிலே இந்நிகழ்ச்சி ஈடு இணையற்றது. அதற்கு முன்பும் அத்தகைய சம்பவம் நிகழ்ந்ததில்லை. அதற்குப் பிறகும் அத்தகைய நிகழ்ச்சி சம்பவிக்க வில்லை. போயர்களிட மிருந்து தப்பித்து வந்த போது அவருக்குப் பிரக்யாதி ஏற்பட்டது போல இந்நிகழ்ச்சியாலும் அவர் பிரசித்த மடைந்தார்.

இறுதியில், சர்ச்சில் கட்சி மாறினார். சபையில் லிபரல் கட்சியினருடன் அவர் அமரலானார். 1906-ம் வருடத்திய பொதுத் தேர்தலில் மாஞ்செஸ்டரில் லிபரல் தொகுதியி லிருந்து போட்டியிட வேண்டு மென்ற அழைப்பையும் அவர் ஏற்றுக் கொண்டார். தேர்தலில் வெற்றி பெற்று லிபரல் கட்சி அங்கத்தினராக சபையில் அவர் அமர்ந்தார். இந்தத் தேர்தலினால் டோரி (கன்ஸர்வேடிவ்) கட்சியினர் பதவி யிழந்து லிபரல் கட்சியினர் அரசாங்கம் அமைத்தனர். லிபரல் கட்சி அங்கத்தினரான வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு

மந்திரி சபையில் ஸ்தானம் அளிக்கப்பட்டது. காலனிகளுக்கான துணை மந்திரியாக அவர் பதவி யேற்றார். இந்தப் பதவி வெளித் தோற்றத்தில் மரியாதை, மதிப்புக்குரியதாகத் தோன்று விடினும் முப்பத்தோராவது வயதிலே அந்த பதவியை அடைந்ததன் மூலம் அவரது பெயர் பிரபல்ய மடைந்தது.

இந்தத் தேர்தலின்போது, சர்ச்சிலின் வாழ்க்கையிலே மாதர் ஓட்டுரிமை இயக்கம் குறுக்கிட்டது. அவரைப் பரம வைரியாக அந்த இயக்கம் ஏன் கருதியது என்பதை ஐம்பது வருடங்களுக்குப் பிறகு இப்போது தெரிந்து கொள்வது கஷ்டமாக விருக்கிறது. அவரது தோற்றம், அவரது மனோபாவத்தில் ஆண்மை பிரதிபலித் தது ஆகியவை மாதர்களுக்கு வெறுப்பு அளித்திருக்கலாம். சர்ச்சி லின் சுவ ரொட்டி விளம்பரங்களிலே மாதர் ஓட்டுரிமை இயக்கப் பிரசாரம் செய்யப்பட்டது. அவர் பேசும் கூட்டங்களில் மாதர்கள் கலாட்டா செய்து வந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் கூட்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக போலீஸ் உதவியை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சஞ்சலத்துக்குள்ளான சர்ச்சில், மாதர் இயக்கத் தலைவி மிஸ் கிரிஸ் டபெல் பாங்க் ஹர்ஸ்டை எவ்வாறு சாந்தப்படுத்துவது என்பதை யோசித்து கடைசியில் அவளை மேடைக்கு அழைத்து கேள்விகள் கேட்க அனுமதித்தார். இந்த அழைப்பைப் பயன் படுத்திக்கொண்டு, அவர் வாய் திறந்த ஒவ் வொரு சமயமும் அவள் எழுந்திருந்து கேள்விகள் கேட்கலானாள். இறுதியில், 'கோபாவேசத்துடன் "மாதர்களுக்கு ஓட்டுரிமை வழங்கு வதை ஆதரித்து ஓட்டுச் செய்யுமாறு என்னை எதுவும் தூண்டாது" என்பதை அவர் தெளிவு படுத்தினார். மாதர் ஓட்டுரிமை இயக்கத் தினருக்கு கடும் எச்சரிக்கை செய்யும் தோரணையில் "இத்தகைய முக்கியத் தத்துவம் வாய்ந்த பிரச்சனையில் பெண்புத்தி கேட்கும் பேதை நான் அல்ல"-என்பதையும் அழுத்தம் திருத்தமாக அவர் விளக்கினார்.

(தொடரும்.)

187044

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# ஜவாஹிறுல் பவாயித்

## ஆறாம் பதிப்பு

இப்புத்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திரு நாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே தர்ஜுமாக்களும் தக்ஸீறுகளும், காஸியத்துகளும், 2-வது 'அஸ்மா உல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷர்ஜ விட்டும் தனித்ததுமான 40-அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து, அஜாயிபு, முஃஜிஸாத்து, அஸ்ரூறு முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும்; 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர் பிராணிகள் சகல ஜந்துகள் ஒவ்வொன்றின் குணகுணங்களும், அவைகளின் அவயவ மென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும்; 4-வது மனுமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கு விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும்; 5-வது வைத்திய சுருக்க மென்னும் சகல வியாதிகளுக்கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களு மிருக்கின்றன. இவற்றின் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோகிருப்பில் அறபியிலும் மற்றவை யெல்லாம் சுத்த தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ், 5.

# ஹஸ்ரத் ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்.

ஆயிஷா நாயகியின் வம்ச பாரம்பரையும், குழந்தை பருவமும், கதீஜா ஸம்பிராட்டியாரின் வபாத்தும், ஆயிஷா நாயகியின் திருமணமும், மஹர் (விவாக கட்டணம்) விபரமும், நபி பெருமானார் ஹிஜ்றத்து செய்தல், ஆயிஷா நாயகி மதினாவுக்குப் போதல், சீதனச் சாமான்களும், வலிமாவிருந்தும், ஆயிஷா நாயகியின் குடித்தன ஆரம்பமும், பொம்மை விளையாட்டும், ஆயிஷா நாயகி பால் ரஸூலுல்லாவின் அன்பும், ஆயிஷா நாயகியின் செல்வாக்கும், நீதி நெறிகளும் சமத்துவமும் மேன்பாடும், கல்வித் திறமையும், பெருந் தன்மையும், தர்ம குணமும், உபசார நிலைமையும், ஆண்டவனிடத்து பயமும், வணக்கமும், தம்வீட்டுக் காரியங்களை தாமே செய்து கொள்ளும் குணமும், தப்புரவான சுபாவமும், கணவருக்கு கீழ்படிந்து நடத்தலும், கோஷா நாகரீகமும், அணியும் உடையின் தன்மையும், ஸ்திரிகளுக்கு வைஅத்து கொடுத்தலும், ஆழ்ந்த கருத்தோடு பேசும் திருமொழிகளும், விபரமாய் கூறப்பட்டிருப்பதோடு முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகளும் குவிந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1—9—0

மேற்படி அறபுத் தமிழ் விலை ரூ 4—0—0

மேற்படி ஹஜரத் கதீஜா நாயகி, பாத்திமா நாயகி, ஆயிஷா நாயகி ஆக மூன்று நாயகிகளின் ஜீவிய சரித்திரம் ஒரே கட்டடம் கலிகோ பைண்டு ரூ. 4

ஷை 3-நாயகிகளின் ஜீவிய சரித்திரம் அறபுத்தமிழ் ரூ. 8

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, மைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்-5.